PR: No: 62. 23.01.2020

பத்திரிக்கை செய்தி

தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகை காலங்களில் பயணச்சீட்டு பெறும் பயணிகளிடம் நேரிடையாகவும், இணையதளம் முலமாகவும், ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் செய்யும் நடவடிக்கையினை தடுக்கும் பொருட்டு சிறப்பு தணிக்கை மேற்கொள்ள, **திரு.தென்காசி.எஸ்.ஜவஹர்,ஐ.ஏ.எஸ்.,** முதன்மைச் செயலாளர்/போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால், திருச்சி துணைப் போக்குவரத்து ஆணையரகத்தின் சரகத்திற்குட்பட்ட திருச்சி(மேற்கு), திருச்சி(கிழக்கு), திருவரங்கம், கருர், அரியலூர், மற்றும் பெரம்பலூர், அலுவலக வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் / இயக்கூர்தி ஆய்வாளர்கள், மற்றும் பகுதி அலுவலக இயக்கூர்தி ஆய்வாளர்களால் சிறப்புத் சோதனை ( Special Checking ) மேற்கொள்ளப்படுவது வழக்கம். அந்த வகையில், கடந்த **11.01.2020** முதல் **21.01.2020** வரை மேற்கண்ட அலுவலர்களால் சிறப்பு வாகன தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் ஆம்னி பேருந்துகள் மற்றும் இதர வாகனங்கள் என இரு பிரிவுகளாக வாகன சோதனை நிகழ்த்தப்பட்டது.

இந்த தணிக்கையின்போது, 1787 ஆம்னி பேருந்துகள் மற்றும் 2115 ஏனைய போக்குவரத்து வாகனங்களென மொத்தம் 3902 வாகனங்கள் தணிக்கை செய்யப்பட்டன. இதில் 268 ஆம்னி பேருந்துகளுக்கும் 327 ஆம்னி - பேருந்துகளல்லாத வாகனங்களுக்கும் தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டன. சோதனையில் கண்ட குற்றங்களுக்கு இணக்கக்கட்டணமாக **ரூ.8,00,700/-** வசூலிக்கப்பட்டது. மேலும், வசூலிக்கப்பட வேண்டிய இணக்க கட்டணமாக ரூ.18,71,900/- நிர்ணயிக்கப்பட்டது. தமிழ்நாட்டிற்கு முறையாக வரி செலுத்தாமல், இயக்கப்பட்ட ஆம்னி பேருந்துகளுக்கு ரூ.2,53,130/-ம், இதர போக்குவரத்து வாகனங்களான சரக்கு வாகனங்கள், மேக்ஸிகேப், மற்றும் இதர ஒப்பந்த ஊர்திகளுக்கு ரூ.95,400/-ம், ஆக மொத்தம் **ரூ.3,48,530/-** சாலை வரியாக வசூலிக்கப்பட்டது.

மேலும், உரிய அனுமதிச் சீட்டு மற்றும் வரி செலுத்தாமல் இயக்கப்பட்ட 2 ஆம்னி பேருந்தும், அதிக கட்டணம் வசூலித்த குற்றத்திற்காக 2 ஆம்னி பேருந்தும், மொத்தமாக 4 ஆம்னி பேருந்துகளும், பல்வேறு காரணங்களுக்காக 24 இதர வாகனங்களும், சிறை பிடிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதுபோன்று, வருங்காலத்தில் சிறப்பு தணிக்கைகள், மேற்கொள்ளப்பட்டு பயணிகளிடம் ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் செய்வது கண்டறியப்பட்டால் துரித நடவடிக்கையெடுத்து, அத்தகைய வாகனங்களை பறிமுதல் செய்து, அவற்றின் அனுமதி சீட்டினை தற்காலிக தகுதி இழப்பு / இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திரு.செ. உதயகுமார், துணைப் போக்குவரத்து ஆணையர்(பொ), திருச்சி சரகம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தொடர்புக்கு: 9786440722

துணைப் போக்குவரத்து ஆணையர்(பொ),
திருச்சி சரகம்.